# வைத்திய போதினி.

சித்திரப்படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்த
[illegible]த்திரன ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புத் 2. } 1911-௵ மேமீ 1உ { நெ. 5.


## சுகாதார மார்க்கங்கள்.

### ஜலமும் அதன் உபயோகமும்.

"ஜலம் மனுஷஜீவன் நிலைபெற ஆகாயத்திற்கு இரண்டாவதானது உலகத்தில் நாலில் மூன்று பாகத்தை ஜலம் மூடிக்கொண்டிருக்கிறது. மானிட சரீரம் நூற்றுக்குத் தொண்ணூறு பாகம் ஜலமாகவே யிருக்கிறதென்பது சாஸ்திரிகளின் துணிவு. சமுத்திரமானது கப்பல்களைத் தாங்கிச்செல்வதுபோல தேகத்திலுள்ள ஜலம் ஜடமாகிய நாவாயைத் தாங்கிச் செல்லுகிறது. விசும்பினின்று விழும் சுத்த மழைஜலமானது பூமியைச் செழிப்பித்து எங்கும் பசுமைதோன்ற தாவரங்களை வளர்க்கின்றது. புஷ்பங்களுக்கு அழகான வருணங்களை யுண்டாக்கிச் சுகந்த வாசனை யூட்டுகிறது. அதே போல மனுஷனுட்கொள்ளும் ஜலமும் ஆக[illegible] ஜீரணப்படுத்தி ஜலமயமாக மாற்றிப்போஷிப்பின் நுண்ணிய ச[illegible]தைத் தேகத்தின் சர்வபாகத்துக்கும் கொண்டுபோய் வளர்க்கிறது. தேக வஜீகரத்தை யுண்டாக்குகிறது.

"இந்த ஜலத்தை மூன்றுவிதமாக மனிதனடைகிறான். ஒருவிதம் [illegible]யாகவும் பனியாகவும் ஆகாயத்தினின் றடைதல்; இன்னொருவிதம் பூமியினின்று ஊற்றுக்கண்களின் வழியாய்ச் சுரந்து அடைதல்; மற்றொருவிதம் வானத்தினின் றிழிந்த ஜலமும், பூமியினின்று சுரந்த ஜலமும் பூமியின் [illegible]டத்துக்கு வந்த பிறகு ஆற, குளம், கேணி, இவ்வகை ஜலாசயங்க[illegible]ருந்தடைதல்.

"இம்மூன்று வகையான நீரில் முதலிரண்டும் பரிசுத்தமாம். பிக்தினது அசுத்த ஜலமாம். அசுத்த ஜலத்தை நீக்கிப் பரிசுத்த ஜலத்தைப் பானம்பண்ணவேண்டியது ஒவ்வொருவருடைய கடமை. அசுத்தஜலத்

சுரமானது சரீரம், இந்திரியம், மனம் இவைகளைப் பொங்கப்பண்ணுகின்றன சர்வவியாதிகட்டும் சுரம்அரசனும் பலவானும் சிரேஷ்டமுடையதாயுமிருக்கிறது.

சாக்ஷாத்பகவானாகிய சிவன் பூர்வமாய் இவ்வாறு திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். இஃது மாத்திரமல்ல விஷ்ணு அவதாரமாகிய காசிமகாராஜன், தன்வந்தரி பகவான் சொல்லியிருக்கிறார்கள். வியாதிகட்கும் சுரமேராஜனெனவும் மகாமுனிவர், சரக்முனிவர், பிருதபாகபட்டர், மகாராஜாபவோமாஸ்றமுனிவர் முதலானோர் கூறியிருக்கிறார்கள் சர்வவியாதிகட்கும் சுரமே பிரதானம்.

பிராணிகளின் ஜென்மத்திற்கு முன்னரும் மரணிக்கும் தருணமும் ஆவசியகமாய்ச் சுரமுண்டாகின்றன. அதினாலன்றோ சர்வவியாதிகட்கும் சுரத்தை அரசனும், பலவானும், சிரேஷ்டமுடையதாயும் கூறியிருக்கிறார். சுரம் சர்வரோகங்கட்குமுன் உற்பத்தியாகின்றன, மரணமடையும் சமயத்திலும் சுரமிருக்கின்றன சுரமிருக்கும் சமயத்தில்மாத்திரம் வைத்தியர்கள் ஔஷதப்பிரயோகம் செய்கிறார்கள்.

சுரமில்லாதிருந்தால் யாவரும் மனத்தைரியம் விட்டு வியாகூலப்பட்டு சிகிச்சைகள் செய்யாது கைவிட்டுவிடுகிறார்களன்றோ, அதுமாத்திரமல்ல பிராணனும் தனது வீட்டைவிட்டுப் பயணப்பட்டுவிடுகிறது.

அரசனில்லாது நகரத்திலுள்ள ஜனங்கள் எவ்வாறு நிராசையற்றுப்போகிறார்களோ அதுபோல், வியாதியுடையவர்கட்கு சுரம் கைவிட்டால் ஜனங்கள் நிராசையற்றுப்போகிறார்கள். இதுயாவருக்கும் தெரிந்தவிஷயம் (வைத்திய) நீர் கூறிய வைசூரி வியாதி உற்பத்தியாகுமுன் சுரமுண்டாகிப் பின்பு வைசூரியுண்டாகின்றது. பிரதான வியாதி வைசூரியேயென ஆயுர்வேத வைத்திய சாஸ்திர புத்தகங்களில் சொல்லப்பட்டுள்ளனவாய்க் காணப்படவில்லை. மகாராஜா தன்வந்திரியும் பரமசிவனும் வைசூரி வியாதிக்குச் க்ஷுத்திரரோகமெனச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது மெத்தச்சிறுவியாதி யென்பது பொருள். வைசூரி வியாதிக்குச் சுரமுண்டானால் வருத்தமபாரமாயிருக்கும் சுரம் கோரமில்லாவிட்டால் யாதொரு தீங்கும் செய்யமாட்டா. அப்பொழுதும் இரண்டையும் சீர்தூக்கிப் பார்க்கில் சுரமே பிரதானம்.

சுரம் மானிடர்கட்கு மாத்திரமல்ல, தேவர்கட்கும், சடார்த்துமாக்களுக்கும் சுரமிருக்கின்றன தேவர்கள் தமது மகாதத்துவத்தால் சுரத்தைத்தாங்கிக்கொள்ளுகிறார்கள். மக்களும் தமது கனம்தேவதத்துவங்களைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள் அதனாலன்றோ மக்களும் சுரத்தைத் தாங்கிக்கொள்ளுகிறார்கள்.

மற்றுத்துமாக்களுக்குச் சுரமுண்டானல் அவர்கள் சகிக்கேலாமல் பிராணனை இழந்துவிடுகிறார்கள். அதனல் பெரியோர்களிலிருந்து சிறியோர்கள் வரையிலும் சுரமே பிரதானமென்று தெரிந்தவிஷயம்.

மேற்சுட்டிய சங்கதி நமதபிப்பிராயமன்று சாஸ்திரப்பிரமாணத்தோடு கூறப்பட்டிருக்கின்றன. இச்சங்கதி பெரியவர்களும் பிரதான வைத்தியர்களும் பட்சபாதகமற்றுச் சுரமே பிரதானமென கூறுவார்களென்றெண்ணிச்சிந்திக்கின்றேன். இதில் யாருக்காவது சமுசயமிருந்தால் பெருமாச்சரியமாயிருக்கும். ஆச்சரியம் மாத்திரமல்ல, மரக்கொம்பின் நுனியில் நின்று அடிக்கொம்பை வெட்டும் தன்மைபோன்றும். இக்காரணங்கள் யாவருக்கும் பிரயோசனமுள்ளதாய் காணப்பட்டால், யாட்பாணத்திலுள்ள பிரதான வைத்தியர்களும், பெரும்வித்துவான்களும் இந்தியாவிலுள்ள வைத்தியர்களும், பெரும்வித்துவான்களும், மற்றவர்களும், பட்சபாதகமற்றுச் சுரமோபிரதானமென்றும், அல்லது வைசூரி நோயோபிரதானமென்றும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைப் பத்திரிகைவாயிலாய் தெரிவித்தால் ஜனங்கள் நன்மையை அடைவார்களென நினைக்கிறேன்.

வைத்திய இன்னுமொரு சிறுவசனம் புகட்டுகிறேன் கவனித்துப் பார். உமது பெரியவராகிய ஆயுள்வேத பாஸ்கர சுப்பிரமணிய பண்டிதர் செய்த திராவிட பாஷையாகிய ஜீவரக்ஷாமிர்தம் இரண்டாவது சுரரோகபடலத்தில் சுரமே பிரதானமெனச் சொல்லுகிறார். அப்புத்தகத்திற்குச் சாத்துகவிகள் கூறிய அறிஞர்களு மொத்துக்கொண்டார்கள்.

இவ்வளவு சாஸ்திரப் பிரமாணத்தோடு அறிவைப்புகட்டியும் நீர் ஒத்துக்கொள்ளாவிடில் எவ்வாறிருக்குமெனில் குரங்கின் கரத்தில் மாணிக்கத்தைக் கொடுத்ததன்மை போலாம்.

ஆங்கில டாக்டர்மாரும் யூனனி அஹீம்களும் சுரமே பிரதானம் என்று கூறுகிறார்கள். சுரம் சர்வரோகங்கட்கு அரசன் மாத்திரமல்ல சரீரத்திற்கும் ஒரு தேவதை போலாம், சுரம் பரமசிவனுலுண்டாக்கப்பட்டபடியால் பூசித்தும் நிவர்த்தியாக்கிக்கொள்ளக்கூடியவர் யானெடுத்துக்காட்டிய பிரமாணங்கள், பரமசிவன், சரக்முனி, மகாராஜா தன்வந்தர், பிறதபாகபட்டர், பவுமிஸ்ற முதலானோர் செய்த நூல்களிலாராய்ந்தெடுத்துப் பிரமாணம் காண்பித்திருக்கிறேன்.

அவர்களியற்றிய நூல்களினுல் இரான்ஹீக், ஆங்கிலம், ஜர்மனி, அமரிக்கன் முதலானோரும் வைத்திய சாஸ்ரம் கற்றிருக்கிறார்கள். இதற்கு யாராயினும் பிரமாணங்கேட்டால் எம்மாலுத்திரவழிக்கக்கூடும் எனெனில், தற்காலமுள்ள ஐரோப்பிய வித்துவான்கள் இந்து வைத்தியசாஸ்திரத்தை புகழ்ந்து கூறியிருக்கிறார்கள்.

புகழ்ந்துபேசிய ஐரோப்பியர் சாதாரண மனிதர்களன்று, போர்வேசா, பெரிய டாக்டர்கள் முதலியவர்களே மேற்சுட்டிய மகான்களால் சொல்லப்பட்ட புஸ்தகங்கள் இவ்வுலகத்தில் பிரமாணத்தோடு பிரதான புஸ்தகம். இதில் யாவருக்காயினும் சமுசயமிருந்தால் மாமரத்தின் கொம்பைவெட்டி நட்டுத்தண்ணீர் ஊற்றினால் தழைத்துப்பூத்துகாய்த்து பழுக்குமென்று நினைத்தவன் போலாம். யானெடுத்துக்காட்டிய பிரமாணங்களுக்கு குட்டிவைத்தியர்கள் பேசவேண்டியதில்லை யான் வினவும் வினாக்கள் மெத்தகம்பீரமாயிருக்கும் கட்டுக்கதையால் வெற்றிப்பெறுவது அபூர்வம். ஆயர்வேத சாஸ்திரப்பிரமாணத்தோடு நியாயம் காட்டுதல்வேண்டும். பத்திரிகையிடம் பெறுதாகையால் இன்னும் தொடரும்.

இங்ஙனம்,

ம. கேங்காப்பிறசாத் பண்டிதர், கோளும்பு.

---

## மூங்கிலும் அதன் உபயோகமும்.

மூங்கிலும் அதன் உபயோகமும் என்பதைப்பற்றி மார்ச்சு மாதத்திய "பிழைக்கும் வழி" பத்திரிகையில் T. S. கிருஷ்ணமூர்த்தி என்பவர் அடியில் வருமாறு எழுதுகிறார். இந்தியாவைப் போன்ற உஷ்ணப் பிரதேசங்களில் மிகுதியாய்க்காணப்படும் மூங்கில், மனிதர்களுக்கு எவ்வளவு பிரயோசனமானதென்று எவரும் சொல்லாமலே அறிந்து கொள்ளலாம். அதன் ஒவ்வொருபகுதியும் ஜனங்களுக்குப் பலவிதங்களில் உபயோகப்படுகிறது. மூங்கிலை இந்தியா முதலிய தேசத்தவர்கள் கூடைகள் முடையவும், தட்டுகள் பின்னவும், வீடுகளின் கூரைகளுக்கும் உபயோகப்படுத்துகிறார்கள். சீனு முதலிய தேசங்களிலே ஜனங்கள் மூங்கிலினால் விளக்குக் கூண்டுகளும், தேயிலை, காப்பி, இவைகள் பானம் பண்ண உபயோகமான பாத்திரங்களும், கடுமழையிலும் தாங்கக்கூடிய உரப்பான குடைகளும், உடைகளும், சிப்பம் முதலியன கட்டுங்கயிறுகளும், செருப்புகளும், செய்ய உபயோகப்படுத்துவதுடன் மற்ற வீட்டுக்கு உபயோகமான ஸாமான்களும் செய்ய மூங்கிலை உபயோகப்படுத்துகிறார்கள்.

சீனுவில் மூங்கிலின் உதிர்ந்த இலையைக்கூட விடுவதில்லையாம். அதையும் எடுத்துக்குவித்து, தேயிலை முதலியவைகளைக் கட்டிப் பிற தேசங்களுக்கனுப்ப உபயோகிக்கிறார்கள். அந்த தேசத்தில் மூங்கிலைப் பிளந்து அதனுள்ளிருக்கும் சோற்றை எடுத்துப் பக்வப்படுத்தி மெல்லி

யதும் வழவழப்புமான காகிதங்கள் செய்து அதை சீனிவெடிக்கட்டு முதலியவைகள் செய்வதிலும், விளக்குக் கூண்டுகள் செய்வதிலும், உபயோகப்படுத்துகிறார்கள். * மூங்கிலின் இளங்குருத்துக்களை சீனர் ஜப்பானியர் தின்கிறார்கள்.

முன்னாட்களில் இந்தியாவின் காடு மலை ப்ராந்தங்களிலிருந்த ஜனங்கள் மூங்கிலையே யெல்லாவற்றிற்கும் உபயோகித்தார்கள். "மூங்கிலில் முத்துப்பிறக்கும்" என்பதும் அதன் உயர்வைக் கருதியேபோலும், மூங்கில்களிலிருந்து உதிரும் பூவைக் குத்தி யெடுத்த அரிசியும், உட்குடைவுள்ள மூங்கில் துண்டும், அவர்களுக்கு முறையே உணவு பதார்த்தமாயும், போஜன பாத்திரங்களாயும் பயன்பட்டன. இதாமரங்களிலும் இம்மாதிரிக் காகிதஞ்செய்ய உபயோகமாகும் ஸத்து இருக்கிறதானாலும், மூங்கில் உஷ்ணதேசத்தில் மிகுதியாயும் செழிப்பாயும் வளருவதால் அதையே பலரும் உபயோகிக்கிறார்கள்.

அம்மாதிரி மூங்கில் காகிதம் நம்நாட்டிலும் செய்யப்படவேண்டுமென்னும் கவலை நம் இந்தியர்க்கில்லை. சிலருக்கு இருந்தாலும் இன்னும் அவர்கள் அவ்வாறு செய்ய முன்வந்த பாடில்லை என்றே நாம் வருந்துகிறோம். ஜப்பானில் வீடுகள் மூங்கிற் காகிதத்தினாலேயே கட்டப் படுகின்றன வென்றால், அந்நாட்டில் மூங்கிலின் உயர்வை என்னென்று சொல்வது? இவ்வாறு எல்லாப்பயனுக்கும் உதவும் இம்மூங்கிலை "மூவுலக கற்பகம்" என்றாலும் ஏற்காதோ? அதன் உபயோகம் தெரியாமல் மயங்குபவர்கள் அதை அலக்ஷ்யம் செய்வார்களேயன்றி மற்றெவரும் அதை அலக்ஷ்யம் செய்யமாட்டார்கள். ஆற்று நிறையப் பாலோடினும் அத்தனையும் அருந்த எவர்க்கும் இயலுமோ" என்பதொப்ப, இம்மூங்கிலின் உயர்த்தியான உபயோகங்களை அறியாத மனிதர்கள் அதனை அலக்ஷ்யம் செய்து அதனால் வெகுநஷ்டமடைகிறார்கள். பிறதேசத்தவர் தமக்குக் கடவுள் கொடுத்திருக்கும் பொருள்களைக் கொண்டு கையால் உழைத்துப் பாடுபட்டு-லாபம் அடைந்து மேன்மை பெற்றிருக்க, நாம் மாத்திரம் உண்டுறங்கி, இருந்தவிடம் விட்டெழாமலிருத்தல் தகுமோ? என்பதை மனதிற்கொள்ளும் இந்தியரே நாட்டின் நலங்கருதுபவராவர்.

---

## பொருட்காக்ஷிகளும் அவைகளின் பிரயோஜனங்களும்.

பொருட்காக்ஷிகளும் அவைகளின் பிரயோஜனங்களும், என்பதைப்பற்றி 1910-ம் வருஷம் ஆகஸ்டு மாசத்திய விவேக போதினி பத்திரிகையில் மிஸ்டர் D நடேசய்யர் அடியில்வருமாறு எழுதுகிறார்.

---

* இந்தியாவில் மைசூர் பிரதேசத்திலுள்ள சிலர்கள்கூட மூங்கிலின் இளங்குருத்துக்களை தின்கிறார்கள்.

பத்திராதிபர்.

சென்ற சில நூற்றுண்டுகளாக. பிரான்ஸ், அமெரிக்கா, ஜர்மனி, இங்கிலாந்து முதலிய அன்னிய நாடுகள், கைத்தொழில், கிருஷித்தொழில் முதலான தொழில்களில் மிதமிஞ்சின சாமர்த்தியமுள்ளவர்களெனப்பெயர் வாங்கிவிட்டார்கள். உதாரணமாய் பிரான்ஸ்தேசத்தவர்கள், அவர்களுடைய வாசனை சாமான்களிலும், நவீன உடைகளிலும், சித்திரவேலைகளிலும், பார்ப்போர் கண்களைக் கவரச் செய்யும் சில்லரை சாமான்களிலும் அவர்களைப்போல் எவர்களாலும் செய்யமுடியாதெனப் பெயர் வாங்கிவிட்டார்கள், அமெரிக்கர்களோ தையல்வேலைகளையோ, எழுத்துவேலைகளையோ லக்ஷணமாயும் சீக்கிரத்திலும் செய்துமுடிக்க சிறு இயந்திரங்களை உற்பத்தி செய்து வருவதிலும், உடுப்புகளுக்கு அபூர்வமான புள்ளிபோட்ட துணிகளை இயந்திரங்களால் செய்து வருவதிலும், கிருஷித்தொழிலை நவீன முறைகளால் நடத்துவதிலும், நோய்களுக்கு மருந்துகள் செய்வதிலும் அதிசாமர்த்தியர்கள் என்று பெயர் வாங்கி விட்டார்கள். ஜர்மானியர்களோ வெடிகுண்டுகள் பீரங்கிகள் முதலான யுத்தாயுதங்களைச் செய்வதிலும், பற்பல இடங்களுக்கு வேண்டுமான வேடிக்கையான தட்டுமுட்டு சாமான்கள் செய்வதிலும், உடுப்புகளுக்கு வேண்டிய பலதினுஸ் செக்குகள் உற்பத்திசெய்து வருவதிலும் அவர்களுக்கு ஈடு எவர்களுமில்லை யென்று பெயர் வாங்கிவிட்டார்கள். ஆங்கிலேயர்களோ பலதினுஸ் கச்சை துணிகள், மல்கள், மஸ்லின்கள், உரோமங்களால் செய்யப்படும் பலதினுஸ் ட்வீட்கள் செய்வதிலும் படங்கள் எழுதுவதிலும், ரணவைத்தியர்களுக்கு வேண்டிய ஆயுதங்கள் செய்வதிலும், நெசவு இயந்திரம் முதலான இயந்திரங்கள் செய்வதிலும், பலநோய்களுக்கான மருந்துகள் செய்வதிலும், போர்க்கப்பல்கள் செய்வதிலும் அதிசாமர்த்தியர்களென்று பெயர் வாங்கி விட்டார்கள்.

மேற்சொல்லியவாறு அந்தந்த தேசத்தியவர்கள் அவரவர்கள் புத்தி, யுக்தி, சாதுர்யங்களால் செய்துமுடித்த சாமான்களை, பிரதமமாக அவரவர்கள் தேசங்களின் பிரபல ஸ்தலங்களில் காக்ஷிசாலைகளை எற்படுத்தி, தேசத்திலுள்ள கைத்தொழிலாளிகளுடையவும் இதரர்களுடையவும் புகழ்ப்பெற்றுப் பலதேசங்கள் அறிய பிரவித்திசெய்து வருவதுடன், தாங்களும் விருத்தியடைந்து வருகிறார்கள். அன்றி மேற்படி தேசங்கள் நாகரீகத்தில் விசேஷ விருத்தி பெற்றவைகளானதால், பல தேசத்தியவர்கள் சாமார்த்தியங்களை ஒப்பிட்டுப் பார்க்க பலதேசத்தியவர்கள் ஒன்றுகூடி, பொதுப் பொருட்காக்ஷிகள் அந்தந்த் தேச தலைநகரங்களில் கூட்டி, சரிபார்த்து, ஒருவரையொருவர் போட்டி போட்டு,

விருத்தியடைந்து வருகிறார்கள். இவ்வாறாக அந்நிய நாட்டார்கள் கைத்தொழில்களிலும் கிருஷித் தொழில்களிலும் ஒருவரோடொருவர் போட்டி போட்டு, விசேஷ விருத்திபெற்று, அளவற்ற புகழையும் செல்வத்தையும் பெற்றுவிட்டார்கள்.

நமது இந்தியாதேசமோ, ஒரு காலத்தில், மேற்கண்ட எல்லா அந்நியநாட்டாரும் மஹா நாகரீகம் பெற்ற தேசமென்று கருதி, நம்மவர்களின் அபூர்வ கைத்தொழில் வேலைகளைக்கண்டு மெச்சி, நம்மவர்களால் செய்யப்பட்ட வஸ்துக்களை அபார பொன் நாணயங்கள் கொடுத்துவாங்கி வியந்தார்களென்றாலும், நாம் பல நூற்றாண்டுகளாக அவ்விதமான புகழ்களை இழந்து, நமது கைத்தொழில்களை மறந்து, நாசமடைந்துவிட்டோம். ஆனால் இப்பொழுது சில வருஷங்களாக நூதன எழுச்சி தோன்றி, நமது தேசத்தில் கைத்தொழில் அபிவிருத்தி விஷயமாய் பலமான பிரஸ்தாபங்கள் நடந்து வருகின்றன. அன்றி ஆங்காங்கு சில கைத்தொழிற்சாலைகள், நூல் நெசவு இயந்திர ஸ்தாபனங்கள் முதலியவைகள் ஸ்தாபனமாகி வருகின்றன. மேலும் சென்னப்பட்டணத்தில் ஓர் கண்ணாடி தொழிற்சாலையும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

அந்நிய நாட்டார்களை அனுசரித்து கைத்தொழில் அபிவிருத்தி விஷயமான பிரஸ்தாபங்கள் நடத்திவர வருஷா வருஷம் கூட்டங்கள் கூடி வருவதுடன், கூட்டங்களை அனுசரித்து அவ்வவ்விடங்களில் செய்துவரும் கைத்தொழில் பொருள்களையும் சேகரித்து பொருட்காக்ஷிகளை நடத்திவருகிறார்கள். அவ்விதப் பொருட்காக்ஷிகளை தொழிலாளிகளும் இதரர்களும் உற்சாகத்தோடு நடத்திவர ஆவேசிகளாய் ஆகிறார்களென்று நாம் பார்த்து வருகிறோம். ஆகவே நம்மவர்கள் ஒருகாலத்தில் கைத்தொழில் வேலைகளிலும், கிருஷி வேலைகளிலும், வைத்திய வாகடங்களிலும், அஸ்திர சாஸ்திர வேலைகளிலும், உலோஹங்களை சேகரிக்கும் சுரங்க வேலைகளிலும், சித்திரமெழுதும் வேலைகளிலும் மஹாநிபுணர்களென்று அந்யர்களால் மெச்சப்பட்டவர்களாயிருந்தாலும், இப்பொழுது நாமடைந்திருக்கும் மஹாபரிதாபமான ஹீனஸ்திதியையுணர்ந்து, நாம் மேலும் மேலும் விருத்திக்கு வரும் வழிகளை நாடி தகுந்த முயற்சியெடுத்து, மேற்சொல்லியவாறு நவீன நாகரீக வழிகளை அனுசரித்து; அவ்வவ்விடங்களில் கூடிப்பேசும் வழக்கங்களையும் பொருட்காக்ஷி நடத்தும் முறைகளையும் கைவிடாது நடத்திவரவேண்டியது அத்தியாவசியமாகும்.

# தனக்குத்தானே தீங்கு சம்பாதித்துக்கொள்வது.

இவ்வுலகின் கண் வசிக்காநின்ற மானிடர்களில் அநேகர் தத்தம் வேலைகளைச்செய்து காலங்கழிப்பதாக நினைப்பதில்லை யானை தன் தலையில் மண்ணைவாரிப் போட்டுக்கொள்வது போல் நாய், குரங்கு, பூனை, கிள்ளை, புறு முதலிய ஜீவஜெந்துக்களை வளர்க்கிறார்கள், அதனால் வரும் பாவமின்னதென்று அறிகிறதுமில்லை. கிள்ளையை வேஷாக்காக மடியிலாவது கையிலாவது வைத்துக்கொண்டிருக்கிறது, நாய் பூனை அதை ஒரே கௌவா கக்கௌவிக்கொண்டு போகிறது, நாயோ வருகிற மனிதர்களை கடிக்கிறது அவர்கள் துஷ்டஜெந்துவென்று பிரியாது செய்கிறது அதற்குடையவர்கள் விசாரணைக்குப்போயும் வைக்கீல்களை நேமித்தும் தப்பித்துக்கொள்ளவேண்டிய மார்க்கங்களை ஊர் ஊராய் போய்த்தேடுகிறது சமய ஊர்ச்சிதமாக சிலர் அபராதமும் செலுத்துகிறார்கள், கோரட்டார அப்படிப்பட்ட நாயைக் கொன்றுபோடவும் சொல்கிறார்கள். சில நாய்கள் வீட்டுக்கூறை ஏறினால் அதைக்கொல்கிறார்கள், அது கூறை ஏறினலிவர்களுக்கென்ன வீட்டைப் பந்தோபஸ்து செய்யவேண்டியது தானே நாயை அடிப்பானேன் அதைச்சுமப்பானேன் உங்களை யாரப்பா இவைகளை வளர்க்கச்சொல்கிறது ஐயோ பரிதாபம் தனக்குத் தானே தீங்கு செய்வாருண்டா இதை யறியாதல்லவா சிலர்கள் புலாலை உபயோகிக்கிறார்கள். அந்த புலாலை யுண்ணவிட்டால் பொழுதுபோகாதா! அல்லது சோறு செல்லாதா! வயறு நிறையாதா! வாயிருக்காதா! ஒருயிரைக்கொன்று இந்த அநித்யமான தேகத்தை பெருக்கவேண்டும். கொல்லாமையைக் கைக்கொள்ள வேண்டியதாக எத்தனையோ சாஸ்திரங்கள் முறையிடுகிறது. அவைகளையாவது சிலவிவேகிகளாயிருப்பவர்கள் கவனித்துக் கொள்ளக்கூடாதா, சிலதனவான்கள் மறந்திருக்கிறார்களல்லவா இனியாவது கொல்லாமை என்ற விரதத்தைக் கைக்கொள்வீர்களாக அடியிற்கண்ட நாயனார் வாக்கியத்தையும் கவனிக்கற்பாலது, "கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண் பேற செல்லா துயிருண்ணுங்கூற்று" "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி யெல்லாவுயிருந் தொழும்" "தன்னூன்பெருக்கற்குத் தான்பிறிதூ னுண்பா னெங்ஙனமாளு மருள்" "படைகொண்டார் நெஞ்சம்போனன் றூக்காதொன்ற னுடல்சுவையுண்டார் மனம்" "முக்குத்தைத்தரியாரே பிறர் தேகத்துட்குத்தி யூன்றின்பவர்" எனக்கூறுகின்றனர். "கொல்லாவிரதங்குவலயமெல் லாமோங்க, வெல்லார்க்குஞ் சொல்வதென்னிச்சை பராபரமே" "கொல்லாவிரதங்கைக் கொண்டவரே நல்லோர்மற், றல்லாதார் யாரோ வறியேன் பராபரமே" எனத் தாயுமானவர் கூறுகின்றனர்.

## பழனித்தாலூகாவில் பிளேக் விஷயங்கள்.

பழனி:—சென்ற ஆறுமாத காலமாக இந்நகரைப்பீடித்திருந்த பிளேக்கென்னும் கொடிய வியாதி அநேகம் அருமுயிர்களைக்கவர்ந்துகொண்டு தற்சமயம் ஒன்றுமில்லாமல் நின்றுபோனதால் சர்க்காரார் ஜனங்களை குடியேரும்படி சொல்வதாகத் தெரியவருகிறது. தண்டபாணிக் கடவுளுடைய சந்நிதிக்கும் பயங்கரத்தால் யாத்திரிகள் ஒருவரும் வருகிறதில்லை.

ஆய்க்குடி:—இது பழனியின் கிளக்கில் திண்டுக்கல் ரஸ்தாவில் 3-வது மைலிலுள்ள யூனியன் கிராமம் இதிலும் இதன் சுற்றுப்பட்டிகளிலும் மஹாமாரி பரவி 500 ஜனங்களைக்கொள்ளைக்கொண்டு ஊர்கள் காலியாகிவிட்டது.

கணக்கன்பட்டி:—இந்த கிராமத்திலும் அநேகம் வீடுகளில் எலிகள் விழுந்து 7 கேஸ்கள் ஏற்பட்டு ஊர் காலியாகி காடுகளில் ஜனங்கள் வாசம்புரிகிறதுடன், இந்த தாலூகாவின் சுற்றுக்கிராமங்களான பாலசமுத்திரம், நெய்க்காரபட்டி, அமறம்பூண்டி, மேலக்கோட்டை, பூலாம்பட்டி, எரமணுபக்கன்பட்டி, கோம்பைபட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, சத்திரப்பட்டி, விருப்பாக்ஷி முதலான கிராமங்களிலும் கேஸ்கள் ஏற்பட்டு ஊர்கள் காலியாகிவிட்டது. அநேக ஜனங்களும் இனக்குயூலேஷன் செய்துகொண்டும் இன்னம் செய்தும் வருகிறார்கள். அந்த தாலூகாவில் பேரில்மட்டும் கடவுளுடைய கோபம் இவ்விதம் ஏற்பட்டதானது அதிக ஆச்சரியமாயிருக்கிறதும் ஜெகதீசன்தான் காப்பாற்றவேண்டும்.

பூ. ப. செல்லக்குமாரக்கவுண்டர்,
கணக்கன்பட்டி.

---

## சுத்தமனமும் ஒருமைப்பட்ட சிந்தையும்.

உலகப்பற்றுகளினின்று ஒருவன் வெளியேறிப்பறக்க இரண்டு இறக்கைகள் வேண்டும். கபடமின்மையும் தூய்மையுமாம். தன்நோக்கமெல்லாம் கபடமின்மை யென்ற இசைபற்றியதாக இருக்கவேண்டும். தன் அன்பெல்லாம் தூய்மையென்ற இசைபற்றியதாக இருக்கவேண்டும். அவன் நோக்கம் இறைவனிடம் செல்லவேண்டும். அவன் அன்பு இறைவனைத்தழுவவேண்டும். அவரையே சுகிக்கவேண்டும், மனச்சஞ்சலமின்றிச்சமாதானம் உள்ளானாகில் பிறர் நற்கருமங்கள் உனக்குத் தடைசெய்யாவாம். உன்நோக்கமும் எண்ணமும் கடவுள் கைங்கரியத்திலும் அயலான் க்ஷேமத்திலுமிருப்பின் உன்னுள்ளத்தில், ஆத்மசுகம் அனுபவிப்பாய் [“கெடுக்கவல்லதுங்கெட்டவர்

தங்களை—எடுக்கவல்லது மிம்மன மென்றதை—யடக்கவல்லவனைய பவக்கடல்—கடக்க வல்லவனாவன் கடிதரோ" பிரபுலிங்கலீலை] உன்னெஞ்சம் நேர்மையாக இருப்பின், பார்க்குமிடமெல்லாம் சத்தியதர்சனமும், படிக்கும சாஸ்திரங்களெல்லாம் நல்ல ஆதேசமுமாகத் தோன்றுவதாகும். எவ்வளவு அற்பமான வஸ்துவாயிருப்பினும், எவ்வளவு கேவலமானதாகவிருப்பினும், அது அது அததன்கண் அமைந்துள்ள ஈசன் அருளை அறிவிப்பதாகும். மனத்துக்கண் மாசிலனாகை இருக்கப்பெறின் எல்லாம் தெளிவாய் ஸ்படிகம்போலத்தோன்றும்களங்கம் ஒன்றுமிராது. ஈசனை மெய்யாய் உணர்வாய். சுத்தமனத்துக்கு வானமும் பாதாளமும் உள்ளபடி வெளியாகும. ஒவ்வொருவனும் தன்னுள்ளத்தில் நீதிக்குத்தக்கவாறு தனக்குப் புறம்பாயுள்ளவைகளைப் பற்றி எண்ணுகிறான். சந்தோஷம் உலகில் உண்டானால் நல்லசிந்தனையுள்ளவன உடனேயனுபவிக்கிறான். துக்கம உலகில் நேர்ந்தால் தீயசிந்தையுள்ளவன உடனே உணருகிறான். தீயிற்போகட்ட இரும்பு துருநீங்கிச் சுத்தமாகிறது. அதுபோலக் கடவுளை நோக்குகிறவன தனமோகங்கள் நீங்கிப்புது மனிதனாக ஆகிறான் கொஞ்சம சோம்பலாற் சோர்ந்தால் சொற்ப அனுஷ்டானத்துக்கும் பயப்படுகிறான் பிறர் சகாயம் நாடுகிறான். தம்மை ஜயித்துத்தீரனாகக் கடவுளை வழிபடின், பாரமானதாக முன்எண்ணிய விஷயங்கள் இலகுவாம்.

## CONVERSATION WITH THE DEAD.

### இறந்த ஆவிகளுடன் சம்பாஷணை.

இவ்வுலகத்தேயுள்ள மனிதர்கள் இறந்தவர்களோடு சம்பாஷணை செய்தல் கூடுமென்று "ரிவியு ஆப் ரிவியூஸ்" என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு அதிபரான ஸ்றெட் (Stead) என்பவர் பின்வரும் சமாசாரத்தினால் வெளியிடுகின்றார்.

மறித்த ஆவிகளுடன் சம்பாஷிப்பது ஆச்சரியமும் பொய்மையும் போல் தோன்றினாலும் சாதன முறையில் அஃது உண்மை என்று திருட்டாந்தப்படுத்தப்படுகின்றது. உலகத்திலேயுள்ள சமயங்கள் எல்லாம், மறு உலகத்தைப்பற்றிய நிர்ணயம் உடையன. எல்லா மதங்களும் ஆத்ம தத்துவ ஞான சாஸ்திரங்களும், மனிதனுடைய இயற்கை அறிவுமாகிய எல்லாம் மனிதன் உடம்பைவிட்டு நீங்கிய பின்னும் சீவிக்கின்றான் என்று சாதிக்கின்றன. இந்த உண்மையைக்குறித்து ஆராய்ச்சி செய்வதற்காக வெகு பிரயாசை எடுக்கப்பட்டது. ஆவிகளோடு சம்பாஷிப்பதற்காய் ஆயத்தப்படுத்தப்பட்ட (Julia Burean) மண்டபத்திலே இப்பயிற்சி நடைபெறலாயிற்று. தாம் இவ்வுலக வாழ்வை ஒருவியப்பின் குறித்த மண்டபத்திலே வந்து சம்பாஷிப்பதாய் அநேகர் வாக்குப்பண்ணியிருந்தார்கள் என்றாலும் அவர்களில் அரைவாசிப்பேர் மாத்திரம் கொடுத்த வாக்கை நிறைவேற்றினர். முன்னமே இறந்துபோனவர்கள் தம் உறவினர்களை மறந்துபோவதில்லை என்று தெரிவித்திருக்கின்றார்கள்.

கடந்த புரட்டாசி மாதம் 16உ மேற்படி மண்டபத்தில் நடந்த வோர் சம்பர்ஷிணை வருமாறு:—

ஆவி:—நீ காலன்ஸ் நகரத்துக்குப் போவாயானல் யான் உன்னைப் பின் தொடருவேன்.

ஸ்ரெட்:—நீ யார்?

ஆவி:—யான் சிறிது காலத்துக்குமுன் ஆகாய விமானத்தால் மரித்துப்போன "லெவ்பவர்"

(இப்பெயருள்ள மனிதனை அவ்விடத்தில் யாரும் அறிந்திலர்.)

ஸ்ரெட:—பறக்கும் யந்திர சாரதியாகிய "புலோரவ்" என்பவரை உனக்குத் தெரியுமா?

ஆவி:—ஆம் அந்த இளைஞனை அறிவேன். அவனை எச்சரிக்கின்றேன். அவனுடைய யந்திரத்தில் பழுதிருக்கின்றமையால், பிரயோகிப்பதைக் குறித்துக் கவனமாயிருக்கும்படி சொல்லுகின்றேன்.

ஸ்ரெட்:—நீ அவ்வகை யந்திரப்பிசகினலே அவமிருத்தடைந்தாயா

ஆவி:—ஆம், அஃது நமக்குத் தெரிந்திருக்குமென்று எண்ணினேன்.

ஸ்ரெட்:—நீ அவமிருத்தடைந்த வகை யாது?

ஆவி:—என்ன வகையென்று சொல்லமாட்டேன். அது தெரியவில்லை.

ஸ்ரெட்:—நீ விழுந்தபோது உனக்கு அறிவு இருந்ததா?

ஆவி:—சொல்லுகிறேன் கேளும். நான் விழுகின்றேன் என்று தெரிந்தது. ஆனல் நிலத்தை சமீபதற்கு முன்னமே என் அறிவு கெட்டுப்போயிற்று. என் சரீரத்தில் யாவும் நோவு உணர்ந்திலேன் என் ஆவி மேலெழும்புவதுபோ லிருந்தது. அந்தரத்திலே மிகுந்த வேகமாய்ச் சுழன்றுகொண்டிருந்தேன். அப்பொழுது ஏதோ ஸ்நாப் என்று சத்தங்கேட்டது. அப்பால், யான் ஆகாயத்தில் என் பிராணத்திற்கு மேலே பறந்துகொண்டிருந்தேன். அதைக் குறித்து யாதும் வெறுப்படையவில்லை. மகா வல்லமை பொருந்திய ஒரு உருவைக் கண்டு திகிலடைந்தேன் அஃது என்னை ஆறுதற் படுத்திற்று.

ஸ்ரெட என்பவர் அந்த ஆவியின் எச்சரிப்பைப் புலோரவ் என்பவருக்கு அறிவித்தபடியால் அதிக மோசத்திலிருந்து தப்பினர்.

## ஹாஸ்யத் துணுக்குகள்.

சந்தாதாரன்:—பத்திராதிபரைப் பார்த்து ஐயா பத்திராதிபரே! சென்ற 4-வாரங்களாகத் தாங்கள் பத்திரிகையில் வெளியிடும் விஷயங்கள் மிகவும் நன்ருயிருக்கின்றன.

பத்திராதிபர்:—நான் ஒருமாத லீவிலிருந்து இப்போதுதான் வந்தேன். பத்திரிகை விசேஷங்களென்ன!

ஜெயில் வேடிக்கை பார்ப்பவர்:—நீ இங்கு இருப்பதற்கு என்ன காரணம்?

கைதி:—விருப்பந்தான் காரணம்.

வேடிக்கை பார்ப்பவர்:—எவ்விதம் விவரமாய்ச் சொல்?

கைதி:, நான் ஒருவனுடைய கடியாரத்தில் விருப்பங்கொண்டேன் அதை நான் வைத்துக்கொண்டிருப்பதில் அவனுக்கு விருப்பமில்லை. நியாயாதிபதி நான் இந்த இடத்தில் 5-வருஷம் வரை இருக்கும்படி விருப்புங்கொண்டுவிட்டார்.

## ஓர் கடிதம்.

அன்பிற்சிறந்த அண்ணலோ! நீவிர் எம்முழி அன்பால் இனிதுடன் அனுப்பிய "சுதேச வைத்திய ரத்தினம்" என்னும் அரும்புகழடைந்த ஆயுர்வேத சாஸ்திரம் வந்தன கண்டு வகையுளங்கொண்டு வாசித்துணர்ந்து அளவிலா ஆனந்தமடைந்தோம்!

குரைகடலுடுத்த விக்குவலயத்திற்கு குறைவிலா நன்மை நல்கும்! என்பதற்கு அணுவளவேனும் ஐயமில்லை! ஆ! ஆ!! நம் "சுதேச வைத்திய ரத்தினத்தின்" நனியை எம்நர்வொன்றில் நவிலற்பாலதோ! நோய்களையும், நோயின் குணங்களையும், நோயை நிவர்த்திக்கும் சிறந்த மூலிகைப் பிரயோகங்களையும், மற்றுமுள்ள பற்பல ஒளஷதங்களையும் யாவரும் எளிதில் கொள்ளக்கொண்டுணரும்படி தெள்ளிதின் விளக்கியிருக்கும் இந்நூலின் மாண்புசாலவும் பெரிதே! இதனால் விளங்கும் தங்களின் தகமையின் பெருமையையும் கருணையும யாமென்றும் மறக்கற்பாலதன்றும்

இத்தகை இனிதாகிய தங்களின் "சுதேச வைத்திய ரத்தினமாகிய" ஆயுர்வேத சாஸ்திரத்தை ஆரியநாட்டு அன்பர்கள் அன்புடன் ஆதரித்து அரும்பயன் பெருவார்களாக இவைநிற்க.

இப்பூவுலகிற்கு இன்றியமையாச் சிறப்புடையதாகிய "சுதேச வைத்திய ரத்தினம்" எனும் இவ்வித அரிய நூலும் இயற்றி தற்காலமும் "வைத்திய போதினி" என்னும் பெருமையான்ற பத்திரிகையும் வெளியிட்டு நம்தமிழ் நாட்டிற்கு நவிலவொண்ணு! நலம் விளைத்த தாங்கள் நீடித்த ஆயுளும நித்திய சுகமும் பெற்று வாழ்வுறுமாறு! ஆதியாகிய பெருமான் அருள்புரிய அஞ்சலிக்கின்றோம். மங்களம்! தங்குக!!

இங்ஙனம்,

மா. வே. சோணைமுத்து ஆசாரி, மார்க்கயன்கோட்டை.

---

## ஜப்பானிய வைத்தியர்கள்.

ஜப்பானில் வைத்தியர்கள் (Bill) சீட்டனுப்புகிறதில்லை. ஜப்பானில் வறியவனொருவனுக்கு வைத்தியஞ் செய்தால் வேதனங் கேட்பதில்லை. தரித்திரம், நோய் என்னும் இரு சத்துருக்களும் ஒரு வீட்டுள் பிரவேசிக்கின், கொடுத்தாலும் அந்த வீட்டிலிருந்து எதையும், வைத்திய சகாயத்துக்காய்ப் பெறுபவர்கள் திருடர்களென்பதாய் வைத்திய குழாத்தினருளொரு பழமொழியிருக்கின்றது. ஜப்பான் ஜீவிய காலத்தைக் குறித்து ஒரு வைத்தியர் உபந்நியாசித்தபோது, வைத்தியர்கள் நோயாளர்களுக்காய்த் தங்காலத்தையும், மருந்தையும், பரித்தியாகஞ் செய்வதோடு நோயாளிகட்குத் தேவைப்படுவனவற்றைப் பெற்றுக்கொள்ளப்

பணமில்லாவிடின் பணங்கொடுத்து முதவிபுரிகின்றூர்களென்பதாய்ப் பலமுறை கூறியிருக்கின்றூர். ஜப்பானில் ஒவ்வொரு வைத்தியரும் தமது. வைத்தியசாலையில் தாமே மருந்து கலப்பவராக விருக்கின்றூர். ஜப்பான் இராஜியத்தில் மிகச்சொற்ப மருந்துஷாப்புகளேயிருக்கின்றன.

தனவந்தர் ஒருவர் ஒரு வைத்தியரை வைத்தியஞ் செய்வதற்காய்த் தம்மிடத்துக் கழைப்பாராயின், வைத்தியத்துக்காய் வேதனம் பெறச் சீட்டனுப்புவாரென ஒருபோதுங் காத்திருப்பதே கிடையாது. உள்ள படி பார்ப்பின் ஜப்பானில் வைத்தியர் பில் கிடைக்கவே கிடையாது. தற்கால நடவடிக்கைகளெங்கு விழலானவையாய்க் கவனிக்கப்படுகின்றன ஜப்பானிலுள்ளவர்கள் யதார்த்தவான்களாதலால் வைத்தியர் பில்லனுப்பு வது ஆவசியகமற்ற செய்கைளாகும். வைத்தியர் நோயாளியை சௌக் கியப்படுத்திய பின்னர் நோயாளி தன்னுல் கூடியவளவாய் ஒரு வெகு மதியைக் கொடுக்கின்றூர். வைத்தியர் மனம் பூரிக்கப் பெற்றவராய் முகமலர்ச்சி காட்டி நோயிலிருந்தும சொஸ்தமடைந்தவருக்குவந்தனஞ் செய்து அவருக்கு நன்றி கூறிச் செல்கின்றூர். இத்துடன் கொடுக்கல் வாங்கல் முற்றுப்பெறுகின்றது.

## வைத்தியக் குறிப்புகள்.

வெந்நீர்:—ஒழுங்குப்படி சுடவைத்து ஆறினஜலத்தை குழந் தைகளுக்குப் பால் கொடுக்கிறதற்கு இடையில் கொடுத்தால் ஜீரண சக்தியை அதிகப்படுத்தி தேகாரோக்கியத்தை.யுண்டு பண்ணும்

கண்கட்டிக்கு:—ஒரு மேஜைக்கரண்டி அளவு சோடாப் பவுடரை வெள்ளைத்துணியில் முடிந்து அது நனையும்படி வெந் நீர்வார்த்து அந்தச்சூட்டுடனே கண்ணில் வைத்துகட்டி இரவு புழுதும் வைத்துகாலையில் எடுத்துவிடவும் உடனே கண்கட்டி சௌக்கியமாய்விடும். இன்னும் கொஞ்சமிருந்தால் மறுபடியும் அதுபோலவே வைத்துக்கட்டவும். அல்லது கோழிமுட்டை யின் வெள்ளைக்கருவை இறகினுல் எடுத்து இரவு படுக்கைக்குப் போகுமுன் கண்கட்டிச்குப்போட்டுக்கொண்டாலும்குணமாகும்

வெயர்வை நீங்க.—க்ஷயரோகக்காரர்களுக்கு இரவில் காணும் அபிரிமிதமான வெயர்வையை நீக்க, உப்புக்கரைத்த ஜலத் தை மெல்லிய துணியில் நனைத்து தேகத்தில் தடவவேண்டியது.

குழந்தைகள் படுந்தூ அல்லது பால்போட்டுவதற்கு குழந் தைகளை நித்திரையிலிருந்தெழுப்பாதே. குழந்தைகளின் இராத் தூக்கம் ஆகாரம் கொடுப்பதை விடமேல்.

ஆகாரம் :—அழும்போ தெல்லாம் பால் கொடாதே, மெல்லிய ஜீரணக்கருவி கெட்டுப்போய் பல தொல்லைக்குட்படுத் தும், தலைநோய் வயிற்றுநோய் அல்லது வேறு பாதைகளால் குழந்தைகள் அழக்கூடும். ஆனுல் பசியினுல் அழுகிறதென்ற குறிப்பைசெம்மையாய்த் தெரிந்துகொண்டால் பால்குடுக்கலாம்.

## விசித்திர விஷயங்கள்.

**கம்பி யில்லாத் தந்தி:**—இனி ஒவ்வொரு பெரிய ஸ்டீமரிலும் கம்பியில்லாத தந்திப்பிரயோகம் நடத்தும்படி ஒரு ஏற்பாடு உண்டாகப் போகிறது. இதனால் நடுச்சமுத்திரத்தி லோடிக்கொண்டிருக்கும் மரக் கலததுக்குச் செய்தியனுப்பமுடியுமாம்.

---

போப்பாசரிருக்கும்படியான வாட்டிக்கன் புத்தகசாலையில் கையெ ழுத்து பிரதியின் சுருளொன்றிருக்கிறது. இதனுடைய நீளம் 300 அடியும் அகலம் ஒரு அடியுமாம். இப்பிரதி ஒரு சர்ப்பத்தின் தோல் என்றும் இதை பதனிட்டு அதிலேயே அது எழுதப்பட்டிருக்கிறதென் றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஆதிசேஷனென் றழைக்கப்படும் பாதாள உலகத்துப் பாம்பின் தோல் போலும்.

---

**பாடுகிற மரம்:**—நியூபியாவில் "சோபார்" என்கிற ஒருவகை நூதன மரமிருக்கிறது. காற்றடிக்கும்போது குழல் இசையை விட இனிமையான விதமாய் அம்மரம் பாடுகிறதாம். அதன் கிளைகளில் பூச்சிகளாலுண்டான துவாரங்களால் இவ்வித தொனி பிறக்கிறதெனக் கருதப்படுகிறது. செத்தவர்களின் ஆவிகள் வந்து மரத்திலிருந்து பாடு கின்றனவென்று அவ்விடத்து ஜனங்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

---

காதம்தீவிலுள்ள பூனைகள்யாவும் கருப்பு நிறமுடையன. வேறு நிறமுள்ள பூனைகள் அங்கே ஒரு போதும் காணப்படமாட்டா இவை கடலோரத்தில் வசிக்கின்றன. எலிகளுக்குப்பதிலாக நண்டுகளையும் மீன் களையும் பிடித்துத் தின்று வளருகின்றன. குதிரை, மாடு, நாய், ஆடு, கோழி முதலிய மிருகங்களும் பக்ஷிகளுமுண்டு. அவையாவும் காட்டுமிரு கங்களாயும் பட்சிகளாயுமிருக்கின்றன யாவும் கருப்பு நிறமுடையவாம்.

---

கானடாவில் ஒக மாது 120 வருஷங்களாகச் சீவிக்கின்றாள், இவ ளுக்கு விவாகமாகி 18 வயதில் புருஷனிறந்து போயினன் பின்பு இவள் விவாகஞ் செய்து கொள்ளவில்லை. அவளுக்கு குழந்தைகளுமில்லையாம் இவள் தனிமையாக வேலைக்காரர்கள் யாருமின்றித் தனக்கு வேண்டிய வற்றைத் தானே செய்து சீவித்து வருகின்றாள். இவளிடம் 1 லட்சம் பவுன் உள்ளது. இதை அனுபவிக்கும் உரிமையுடையார் எவரோ தெரி யாதென ஓர் அமெரிக்கப் பத்திரிகை கூறுகின்றது.

---

**ஓர் சீமானின் தருமசாதனம்**—லீஸ்ட் என்ற இடத்திலுள்ள ஆர் திம்டன் என்னும் பிறபு இறந்தபோது, அவர், 1,119,8㆑0 பவுனைத் தருமசாதனஞ் செய்தனர். இத்தொகையில் பப்டிஸட்மிஷன் சபை யாருக்கு 467000 பவுனும், லண்டன் மிஷனரிச் சபைக்கு 274000 பவு னும் விடப்பட்டது. இத்தொகை முழுதும் அடுத்த இருபது வருடத் துட் செலவழிக்கப்படல் வேண்டுமென்பதும், அதுவும் பெரிய பிரித்தா னியாவிலும் முகம்மதியர் வசிக்கும் நாடுகளிலும் செலவழிக்கப்படா தென்பதும் அச்சீமானின் கட்டுப்பாடாம்.

## விடுகதை வினா.

விரிகடல்வளைந்த விப்புவிதனி லுள்ளதோர்
விருக்கத்தின் பெயரொன்று
விருப்புறு மாந்தர்க்குயர்வு தருமங்கமொன்று
விலங்கிற்பெரு மிருகமொன்று
வரிசையுடனிவைகளை வழுத்திடில் மூன்றெழுத்தை
வன்மையாய்க் கொண்டுநின்ற
வார்த்தையாகு மிவ்வாக்கியத்தை முறையதாய்
வரையநேருங் குருக்குபமூன்று
வரிகளிலுமப்பெயர்களை வகையாயுரைக்குமிதனை
வலமைமிகு கவிவாணர்
வழுவறவுணர்ந்தனுப்ப வழங்குலவு கும்பகோணமா
வாழ்க்கையில்வாழு "சந்திரசேகரின்"
அரிவரிய கருணையினண்ணலாலில்வ வனியிலென்றும்
அறியாப்புகழ்நிரீஇ யுலவுகின்ற
அதிமேன்மையுறும் "வைத்திய போதினி" அணங்கே!
அன்புடன்கொண்டென்பால் வருகுவாயே!

இங்ஙனம்,
மா. வே. சோணைமுத்து ஆசாரி, மார்க்கயன்கோட்டை.

## வர்த்தமானங்கள்.

**மஞ்சூறியாவில் கொள்ளை நோய்:**—மஞ்சூறியா தேசத்தில் கொள்ளைநோயுண்டாகி தினம் 100-பேரிறக்கின்றனர். 'பட்சியேசன்' என்னுமிடத்தில் நாலாயிரம் பிரேதங்கள் தகனம் செய்யப்படாது கிடக்கின்றன. ஹூலன் என்னுமிடத்தில் உறைபனியில், பனியுருகி ஆறு ஓடும்போது அள்ளப்பட்டுப் போகும்படி குவியல் குவியலாகப் பிரேதங்கள் போடப்பட்டிருக்கின்றனவாம்.

---

**அந்துப்பூச்சியினால் உண்டாகும் நாசத்தை விலக்க ஓர் உபாயம்**—நெல், துவரை இவைகளைப் போலுள்ள மற்ற தானியங்களைச் சேகரித்து சிலகாலம் ஓரிடத்திலேயே வைத்திருந்தால் அவைகளுக்கு அந்துப்பூச்சியினால் உண்டாகும் நாசம் எவ்வளவென்று எல்லோரும் அறிவார்கள், இதைத்தடுப்பதற்கு ஓர் நண்டைக்கொன்று நெல், துவரை முதலிய குவியல்களின் நேரே தொங்கவிடவும். இதைச் சிலர் செய்து வந்து பலனை அடைந்திருக்கிறார்களாம்.

---

**தாரம்பூர் க்ஷயரோகிகள் சாலை**—பம்பாய்க் கனவான் மிஸ்டர் மலபாரியால் தாரம்பூரில் க்ஷயரோகிகளுக்குக் கட்டி விடப்பட்டிருக்கும் சுகவாசச்சாலையைத் தமது தகப்பனார் எட்வர்ட் சக்கரவர்த்தியின் பேரிட்டழைக்க ஜார்ஜ சக்கரவர்த்தி உத்தரவு கொடுத்துவிட்டாரென்று சொல்லப்படுகிறது. ஜார்ஜ் சக்கரவர்த்தி தாமும் மேரிராணியாரும் மிஸ்டர் மலபாரி அந்தச்சாலையை ஸ்தாபிக்கப்பட்டிருக்கக்கூடிய சிரமத்தையும் அவருடைய தயாளச் சிந்தையையும் மிகுதியும் பாராட்டுவதாய் அவருக்கு உறுதி கூறியிருக்கிறார்.

"கிளேமேண்டு மேயர்ட்"—என்னும் ஆகாயக்கப்பலை பிரிட்டிஷ் அரசாங்கத்தில் வாங்கியிருக்கிறார்கள். அதன் விலை சொந்தக்காரரால் 25000 பவுனுக்குக் கூறப்பட்டு 18000 பவுனென வாங்கப்பட்டதாம். இதில் பிரிட்டிஷ் போர்ச்சங்கத்தில் 12500 பவுன் கொடுபட்டு மிகுதி பார்லிமெண்டரி ஏரியல்கமிட்டி என்னும் சங்கத்தாரால் கொடுக்கப்பட்டதாம்.

பற்கள்—இளமைப் பருவத்திலேயே அநேகருக்கு பற்கள் தளர்ந்து விழுந்துபோய் விடுகின்றன. இதற்குக்காரணம் அவர்கள் அதிகமாக இனிப்புள்ள வஸ்துக்களை சாப்பிடுவதினால்த் தானென்று தெரியப்படுகிறது. ஒரு பல்லை, சர்க்கரைகலந்த தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து சிலநாள் வைத்திருந்து பிறகு அதை எடுத்து நசுக்க அது பொடியாகப்போகுமாம். இதினால்தான் நாம் சாப்பிடும் சர்க்கரையும் நமது உமிழ்நீர், நமது தேகச்சூடு, முதலியவைகளோடு சேர்ந்து சீக்கிரத்தில் கெட்டுப்போகின்றனவென்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பட்சிகளைக் காப்பாற்றல்:—இங்கிலாந்து, பிருஞ்சு முதலிய ஐரோப்பிய தேசங்களில் பட்சிகளின் இறகுகளால் பெண்களணிந்து கொள்ளும் தொப்பிகள் செய்யப்படுகின்றன. பட்சிகளின் இறகுகள் வைத்துச் செய்யப்படும் தொப்பிகள் மிகவு மலங்காரமுடையனவாகக் காணப்படுகின்றன. ஆகவே பட்சிகளின் இறகுக்கு மேலைத் தேசங்களிலதிக விலையுண்டு இது காரணமாக அனேக அழகுள்ள பட்சிகளை பலவிதங்களிலும் சுட்டுக் கொன்று வந்தார்கள். இங்ஙனம் செய்துவரின் உலகத்திலுள்ள பட்சிகளெல்லாம் நிர்மூலமாய்விடுமெனக் கண்ட புண்ணிய சீலர் பலர் சபை கூட்டிப் பட்சிகள் அதம் பண்ணப்படாதபடி காலத்துக்குக் காலம் பலமுயற்சிகள் செய்துவந்தார்கள். இவர்களது முயற்சியால் இந்தியாவிலிப்பொழுது பட்சிகள் கொல்லப்படுவதுமில்லை இறகுகளிந்தியாவிலிருந் தேற்றுமதியாவதுமில்லை. ஆனாற்சிலர் திருட்டுத்தனமாக இவ்வியாபாரத்தை இன்னும் நடத்திக்கொண்டு வருவதையறிந்து அதையும் தடைப்பண்ண முயற்சி செய்யப்படுகின்றது.


## ADVERTISEMENTS.

பிரச்னோத்திர ரெத்னமாலை என்னும் ஓர் வேதாந்த சாஸ்திரம்.

இது யாவருக்கும் புலப்படும்படியாக வினாவிடை ரூபமாய் 1000 பிரசினோத்திரங்கள் வரை இதில் அகண்டபரிபூரண சச்சிதானந்த ஸ்வரூபத்தின் மூன்று லக்ஷணங்களும், உள், வெளி, என்ற இருவகைப்பிரபஞ்ச விஷயங்களும், அதாவது இந்த உலகத்தைப்போல் நம்சரீரத்தினுள்ளிருக்கும் உலக விசித்திரங்களும், கர்மம். பக்தி, ஞானமாகிய மூன்று யோகவிஷயங்களும்; பிர்மம், சக்தி, திருமூர்த்தி என்பவைகளின் வரலாறுகளும், ஈசுவர நிர்ணயத்தைப்பற்றிய ஒவ்வொரு மகஸ்தரின் அபிப்பிராயமும், கங்கா நதியின் உற்பத்தியும், மகாமேருவின் சிறப்பும், சூரியனுடைய லோக யாத்திரையின் சூக்ஷுமமும், இன்னும் இதுபோல் பல சிறந்த விஷயங்களும், அடங்கியிருக்கின்றன வி. பி. சார்ஜ் உள்பட இதன் விலை அணா 10 தான். விலாசம்:—

மானேஜர் வைத்தியபோதினி ஆபீஸ், கும்பகோணம்.

## "பாலசந்திரன்"

வாராந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

ப்ரும்மஸ்ரீ மகோமகோபாத்தியாயர் வே. சாமிநாதையர் அவர்கள் முதலிய கல்விமான்களால் வியந்து கூறப்பட்டது. கொழும்பு நகரில் இதுவொன்றே ஏராளமாகச் செலவிடப்படும் சைவத் தமிழ் பத்திரிகை.

வருடக்கிரயம்.

| | | | | |
|---|---|---|---|---|
| உள்ளூர் | ... | ... | ... | 3—0—0 |
| இலங்கையின் பிறவிடங்கள், இந்தியா | | | ... | 4—C—0 |
| தொடுவாய்ப் பகுதி | ... | ... | ... | 5—0—0 |

☞ முற்பணம் கொடுக்கவேண்டியது.

M. V. PONNAMPALA PILLAI,
*No. 103, Checku Street,*
**COLOMBO.**

## MOTO REVE.

1½—H. P. உள்ள மோடார் சையிகிள்களுக்குள் மோடோ ரீவ் தகுந்த மேன்மையுள்ளது. என்னவென்றால், இதின்கனம் பவுண்டு 78-தான். அதாவது சாதாரண மோடார்சையிகிளுடைய கனத்தில்பாதிதான் ரோட்டில் போகும்பொழுது சப்தமில்லாமலும் ஒரு காலன் எண்ணெய்க்கு சுமார் 140 மயில் போகிறதாயும், அதாவது சாதாரண வண்டிக்கு வரும் எண்ணெயில் பாதியிருந்தால் போதும். வண்டியை ஸ்டார்டு (Start) செய்கிறதில் பிரயாசம் இல்லாமலுமிருக்கிறது.

இதர விபரங்களுக்கு எழுதிக்கொள்ளவும்.

**K. S. ராஜ் & Co.,** கும்பகோணம்.

## அசாத்ரோகங்களுக்கு பிரதிக்க்ஷ அவுஷதம்.

கஸ்தூரி திராவகம்—இந்தத்திராவகத்தில் ஒருநேரத்துக்கு மூன்று சொட்டு வீதம் ஒரு ஒயின்கிளாஸ் தண்ணீரில்விட்டு காலை, மாலை இரவு படுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட நீர்அழிவினால் தாங்கமுடியாத வருத்தத்தை மூன்றுநாளையில் சுகமாக்கும். 40 நாள் மருந்து சாப்பிட்டால் வியாதிநன்றாய்ச் சொஸ்தமாகும். தருணவயசுள்ளவர்களுக்கு உண்டான பக்கவாய்வு துர்நடத்தையால் ஆண்மைப்பலமற்ற சையோகம் செய்ய இயலாதவர்களுக்கு உள்ளுக்குச்சாப்பிட மேற்படி திராவகமும் ஆணுடம்பில்பூச துஜ்ஜிபங்கதைலமும் எடுத்து உபயோகிக்க வேண்டியது. இன்னும் மேற்படி திராவகமானது இருமல், மூலச்சூடு, காசரோகம், அதிகநாள்ச்சென்ற வாதரோகம், தலைச்சுற்று, மூளை பலவீனம் ஞாபகசக்திக்குறைவு, கண்புகைச்சல், பார்வைக்குறைவு, நாட்சென்ற பிரமேகம், இவைகளுக்குக் கைகண்ட ஔஷதம். இந்த மருந்திலே கஸ்தூரி, தங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், சாம்பிராணிப்பதங்கம், வேறு மூலிவகைகளும், சேர்த்து திராவகம் வடித்துவைத்திருக்கின்றேன். இந்த மருந்துகளெல்லாம் சேர்க்கப்பட்டிருப்பதனால்தான் இது சீக்கிரம் சுகமடைவிக்குமெனக் கூறுகின்றேன் இந்த மருந்தைக்கொடுத்து அனேக பிராணிகளைச் சுகப்படுத்தி விலைஉயர்ந்த வெகுமதிகளும் பெற்றிருக்கின்றேன். இப்போது எல்லாருடைய பிரயோசனத்திற்காக சொற்பசெலவெடுக்க வெளியே பிரசித்தம் பண்ணிவருகின்றேன் பித்தபாண்டு, மகோதரம், காச்சல்கட்டி, வயிற்றிலிருக்கும் துர்நீர்

களுக்கு கை கண்ட ஔஷதம். விலை அரை அவுன்சுக்கு ரூ 10. இதற்குக்குறைந்து அனுப்பப்படமாட்டாது. தபாற்செலவுபிரத்தியேகம்

**துஜ்ஜிபங்கதைலம்**—சிலர் தம் இளம்பிராயத்தில் புத்தியீனமாய் இந்திரியத்தை தம்கையால் பளுதாக்கிக்கொள்வதால் சிலநாளைக்குப்பின் நரம்புகள்பளுது பட்டு ஆணுடம்பு பலனற்றுச் சுருண்டு சிறிதாய்ப்போய் இந்திரியம் குறைந்தும் துர் ஸ்திரி சையோகத்தால் அனேக உஷ்ண மான மருந்துகள் சாப்பிட்டு பெலனற்றுப்போகின்றார்கள். இவ்விரு வகையுள்ளவர்கள் மனக்கவலையுடன் வியாதியை ஒருவருக்கும் சொல் லாமல் வெட்கப்பட்டு இருப்பார்கள். அவர்கள் இத்தைலத்தை ஆண் உடம்பில்பூசி உள்ளுக்குக் கஸ்தூரி திராவகமும் சாப்பிட்டால் ஆண் உடம்பு சரியான நிலைமைக்குவந்து பலப்பட்டு இந்திரியம் விர்த்தியாகி 44 தினத்துக்குள் வியாதி சுகப்படும். 21 நாள் தைலம்பூசி மேற்படி திராவகம் சாப்பிடுவரேல் வியாதியின் சுகந்தெரியும். ஒரு அவுன்ஸ் தைலத்தின் விலை ரூ 2—8—0. தபாற்செலவு பிரத்தியேகம்.

**வீரிய ஸ்தம்பனக் குளிகை**—ஆச்சரியம்! மிக்க ஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒரே குளிகையில் தெரியும். இந்தக்குளிகை (இந்திராசனம்) ஒருநாளில் ஆயிரம் ஸ்திரீகளைச் சம்போகிக்கிறதற்காக உண்டாக்கப்பட்டது. இதைச்சிலர் சாஸ்திரத்திற்சொல்லிய பிரகாரம் செய்யாமல் சொற்பகிரயத்துக்கு விற்பனை செய்கிறார்கள். அதைச் சனங்கள் பெற்று அதிலே சொல்லிய காரியங்கள் முழுதும் வித்தியா சப்பட்டு ஏமாந்துபோகிறார்கள். ஆனால் சாஸ்திரப்படி அதிகபொருள் செலவழித்துச் செய்கிறவர்களிடம் பெறப்பின்னடைகிறார்கள். இது உலகவியல்பே, இதில் முக்கியமாயறிய வேண்டிய காரியம் யாதெனில், இதின் முழுக்கிரயமுங்கொடுத்து எடுத்து ஒரு குளிகையாற் சுகமறிய லாம். காரியமும் விளங்கும் இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. 12 குளிகைக்குக்குறைய அனுப்படமாட்டா. பரீட் சித்தவர்களே இதன் சுகத்தை அனுபவிப்பார்கள். 12 குளிகையின் விலை ரூ 2. தபாற்செலவு அணு 4.

சாப்பிடும் விதம் சையோகஞ்செய்ய அரைமணித் தியாலதிற்கு முன் ஒருமாத்திரையைச் சாப்பிட்டவுடன் காச்சியபசுப்பாலில் கற்கண் டுபோட்டுக் குடித்தால் இந்திரியம் இளகாது. இளகவேணுமானால் எலுமிச்சம்பழம் சாப்பிடவும்.

கெங்காதார் தைலம்—அண்டவாய்வுக்குக்கைகண்ட உண்மையான மருந்து இதன் விலை 1 அவுன்சு ரூ 5.

மகாநாராயண தைலம்—வாய்வுகள் கபாலபீனிசம் முதலானதுக்கு கை கண்டது. 1 அவுன்சுக்கு 1 ரூ. (மேற்கண்ட மருந்துகளுக்கு தபாற்செலவு பிரத்தியேகம்.

**மிருத்துசீவன அல்லது கஸ்தூரியாத்திரை**—எட்டுவிதமான சுரத் திற்கும், அசுத்தசலத்தினால் கொசு முதலான விஷசெந்துகளினாலுண் டாகும் மலேரியா ஆகியவிஷக்காச்சல்களுக்கும், 18 விதமான சன் னிக்கும் இதில் ஒருமாத்திரையை இஞ்சிச்சாற்றில் உரைத்துச்சாப்பிட் டால் எப்பேர்ப்பட்ட சன்னியும் ஒரு அல்லது இரு வேளைமருந்திற் சுகப்படும். ஏழுவேளை சாப்பிட்டால் சன்னி, காச்சல், சுரம், முதலியன சுத்தமாய்ச்சுகமாகும். 12 குளிகையின் விலை ரூ 2.

**காமனீமது பஞ்சனீ மாத்திரை**—இது தங்கம், அபரக்பஸ்பம், கஸ்தூரி, குங்குமப்பூ, லிங்கசெந்தூரம், மூதலிய விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துச்செய்யப்பட்டுத் தயாராயிருக்கிறது. இதன் சொற்ப குணத்தை மட்டும் காட்டுகிறேன். நீரிழிவு, காசம், இருமல், ஈழை, தீராத வாதரோகம், பிரமேகம், மூலச்சூடு புதிதாய்க்காணும் அண்டவாதம், வெள்ளைமுதலிய வியாதிகள் தீந்து தாதுபுஷ்டி உண்டாகும், மூன்றுநாளில் நல்ல குணம்தெரியும். 44 நாளில் வியாதி பூரண சுத்தமாகும். காலை மாலை 14 நாள் சாப்பிடக்கூடிய 28 மாத்திரைகளின் விலை ரூபா 5. 44 நாள் சாப்பிடக்கூடிய 88 மாத்திரைகள் எடுத்தால் ரூபா 13-க்கு கொடுக்கப்படும். தபாற்செலவு பிரத்தியேகம்.

**சந்திரிகா பிரதம மாத்திரை**—இந்த மாத்திரை காசம், பவுத்திரம், அண்டவாய்வு, பக்கவாய்வு, பித்தபாண்டு, வெள்ளை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, பீனசக்கபாலம், துர்ஸ்திரீ கமனத்தாலுண்டான நோய்கள், வெண்குட்டம், நீரழிவு போகத்தாலுண்டான நோய்களை எல்லாந்தீர்க்கும். இம்மாத்திரையை 21 நாள் சாப்பிட்டால் பூரணசுகமுண்டாகும். மருந்தெடுக்கும்போது வியாதிக்கேற்ற அனுமானம் தெரிவிப்போம். 44 குளிகையின் விலை ரூபா மூன்றரை.

**புத்தகங்கள்**—பின்னுற் காட்டப்பட்டிருக்கும் அருமையான புத்தகங்கள் மானுடர் எவரும் இகபர நன்மைகளைக்கருதி அவைகளைக் கைப்பற்றிக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பதால் இவ்விருவிஷயங்களுக்கும் குருவைப்போல் போதிக்கக்கூடிய மெத்த அருமையான புத்தகங்களானதால் ஒவ்வொருவரும் இவைகளைக்கட்டாயம் வாங்கிவாசிக்கவேண்டியது.

இவைகள் செந்தமிழ் அலங்கார நடையில் எவரும் வாசித்தறியக்கூடிய வெள்ளைமொழிகளாலியற்றப்பட்டு வாசிப்போருக்கின்பத்தையும் மனோஉற்சாகத்தையும் கொடுக்கக்கூடியவைகள், சொற்ப பிரதிகள்தான் இருக்கின்றன.

காலகரணஞ்செய்யவேண்டாம்.

கோகசாஸ்திரம் மாபிள்க்கட்டு ஒரு பிரதி ரூபா 3 கலிக்கோ ரூ. 4

கைத்தொழில் போதினி—மாபிள்கட்டு ரூபா 1. கலிக்கோகட்டு 2

பூலோகௌஷகோபகாரி வாணவேடிக்கைகள் அடங்கிய பத்தாம் சங்கியை ஒன்றுக்கு அணு 10.

அனேக இங்கிலீஷ் சாமான்களடங்கிய ஒன்பதாம் சங்கியை ஒன்றுக்கு அணு 12.

சோகன்லால் சரித்திரம் ஒன்றுக்கு அணு 8.

இன்சுபெக்றர்சீபுசாய்பு சரித்திரம் அணு 12.

மேற்படி சரித்திரமும் சோகன்லால் சரித்திரமும் ஒரேகட்டிடம் ஒன்றுக்கு ரூபா 1 4—0.

ருஷிய ஜப்பானிய யுத்தம் இருபகுதிகள் ஒரு ரூபா.

இரசமணிசெய்யும் புஸ்தகம் (8 பக்கம்) ரூ. 1—4—0.

மேற்காட்டிய புத்தகங்கள் வேண்டுவோர்க்கு தாமதமின்றி சாக்கிரதையோடு அனுப்பப்படும். தபாலில் வேண்டுவோர்க்கு தபாற்செலவு பிரத்தியேகம். மற்ற விபரங்களுக்கு காட்லாக்கை எடுப்பித்துப்பார்க்கவும் இனாமாக அனுப்பலாம். ஒருமுறை இப்பொருட்களை வாங்கி தினமும் மகிழ்வடையுங்கள்.

எமது விலாசம்

**மகாராஜ கெங்காபிரசாத் பண்டிதர்.**

மருதானை முதலாம் டிவிஷன் No. 74, கொழும்பு.

## ரோமசங்காரி சோப்.

தேகத்தின் எந்தப்பாகத்திலும் இந்த ஸோப்பை உபயோகித்தால் யாதொரு கெடுதியுமின்றி ரோமங்களைச் சங்காரஞ்செய்துவிடும். 6-மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய கட்டி 1-க்கு விலை 6-அணா; டெஜன் ரூ 4, வி. பி. சார்ஜ 1-முதல் 3-க்கு 4-அணா.

## ரோமப்பிசின்.

இப்பிசின் நரைத்த மயிரை இரண்டு நிமிஷத்திற்குள் பழயபடி கறுப்பாக்கிவிடும். கெடுதிசெய்யக்கூடியது ஒன்றும் இதில்கிடையாது 1-புட்டி 3-மாதத்துக்கு போதுமானது. டைரக்ஷன் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு விலை 12-அணா; டெஜன் 1-க்கு ரூ 8. 1-முதல் 3-புட்டிக்கு வி. பி. சார்ஜ் 4-அணா.

## கார்பாலிக் டூத்பவுடர்.

இந்தபற்பொடி, வாயிலுண்டாகும் துற்நாற்றத்தைபோக்கி பல்லைச் சேர்ந்த எல்லா வியாதிகளைப்போக்கி பற்களை கெட்டிப்படுத்தும். டின் 1-க்கு $1\frac{1}{2}$-அணா டெஜன் 14-அணா 1-டெஜனுக்கு வி. பி. சார்ஜ் 4-அணா,

Apyly to Messrs—J. SUR & Co.,
Patent Medecine Sellers & General order suppliers,
South Sinthee Road, P. O. (V) Cossipore, Calcutta.
**Agent, Lakshmivilasa Provident Institution Ld. Kumbakonam**

---

## பற்பொடியும் பவளச்சுன்னமும்.

இந்தி சஞ்சீவி யெனும் பற்பொடியானது தஞ்சைமாநகரத்தில் பரம்பரையாய் கையாண்டு வந்தது. நீடித்து அனுபோகத்திற்குவராமல் புதைபட்டிருந்தது. இது ஓர் மஹான்களால் வெளியாகி ஜனங்களுக்கு உபகாரமாகும் பொருட்டாகவும், அனுபோகத்திற்கு ஒத்திருப்பதையும் பல பேர்கள் வேண்டுகோளின்படி வெளியிடத்துணிந்தோம். ஷை பற்பொடியை ஓர் சிட்டிகை யெடுத்து காலையிலும் மாலையிலும் பற்துலக்கி வருவதுடன் இந்த பவள புற்றினல் செய்த சுன்னத்தையும் தாம்பூலத்துடன் 12 நாள் தரித்துக்கொண்டு வந்தால் பல்லசைவு, இரத்தம் வருதல், சீழ்வருதல், புழுவெட்டு, ஜீவிஜிலிப்பு, கூச்சம், நடுக்கம், எகிரில் ஏற்படும் துர்நாற்றம், எகிர்கரைதல், பல்லரணை முதலான நோயை கண்டிப்பாய் நீக்கி சுவஸ்தம் செய்வதோடு ஆயுள்பரியந்திரம் பல்விளாமல் காக்கச்செய்யும்.

| | | | |
|---|---|---|---|
| ஓர் அவுன்ஸ கொண்ட பற்பொடி டப்பா 1-க்கு விலை | 0 | 6 | 0 |
| ஓர் பலம் கொண்ட சுன்ன டப்பா 1-க்கு விலை | 0 | 2 | 0 |

வி. பி. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

பி. ஸாம்பமூர்த்தி ஐய்யர்,
ஆயுள்வேத பண்டிதசாலை, ஆய்குடி போஸ்டு,
திண்டுக்கல் மார்க்கம்.

---

## பூரணசந்திரோதயம்.

பிரதி ஆங்கில௴ 15௳ மதுரையில் பிரசுரமாகிவரும் தமிழ் பத்திரிகை. சந்தா வருஷம் 1-க்கு ரூ 2. தனிப்பிரதி அணா 4.

ப. நாராயண அய்யர், B.A., B.L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர், B.A., B.L., F. T. S. } பத்திராதிபர்கள்.

# பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

26. சுகந்தமூக்குத்தூள்:—இந்த மூக்குத்தூள் மிகவும் நேர்த்தியான முறையால் செய்யப்பட்டிருக்கிறது. வெகு இன்பமான வாசனையுடையது. ஒரு நாளைக்கு ஒரு மனிதன் எவ்வளவு மூக்குத்தூள் உபயோகிப்பானோ அவ்வளவு சாதாரண புகையிலை மூக்குத்தூளுடன் நம்முடைய சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிகை எடுத்து நன்றாய்க்கலந்து கொண்டால் அந்தத்தூள் முழுவதும் அதிக மனோரம்மியமான வாசனையுள்ள மூக்குத்தூளாகிவிடும். கடைகளில் விற்கும் சாதாரண மூக்குத்தூளுடன் ஒரு சிட்டிகை சேர்த்தாலே போதுமானது. தனிமையாக உபயோகப்படுத்துவது அனுவசியம் இத்தூள் சேர்ந்த மூக்குத்தூள் கெடாமல் நெடுநாள் சுகந்த பரிமளத்துடன் காரம் போகாமலிருக்கும். தலைவலி, பீனிசம், சலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், மண்டைக்குற்று, நீர்பீனிசம், நாசியில் துர் நாற்றம், மயக்கம் முதலியது தீரும். இதில் நவச்சாரம் சேரவில்லை, வழக்கமாக மூக்குத்தூள் உபயோகிப்பவர்களிடத்திலுள்ள துர் நாற்றத்தை நீக்கி சதா கமகமவென்று பரிமளத்தை வீசிக்கொண்டேயிருக்கும். இத்தூள் உபயோகித்தால் அடிக்கடி நசியம்போடுகிற வழக்கத்தை நாளுக்குநாள் குறைத்து கடைசியில் சிலர் தூள்போடும் அப்பியாசத்தையே விட்டுவிடும்படிக்கு செய்யும். ஒரு சீசாவிலுள்ள சுகந்த மூக்குத்தூள் சுமார் ஒரு மாதத்திற்குப் போதுமானது. சீசா 1-க்கு விலை அணு 4. வி. பி. சிலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அணு 3 பிரத்தியேகம், 4 முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம், 7 முதல் 12 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணு 7 பிரத்தியேகம்.

27. அசோக கிருதம்:—ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் பகிஷ்டை சரிவர உண்டாகாதிருத்தல், அகாலங்களில் பகிஷ்டையாகுதல், பகிஷ்டை காலங்களில் வெகு கடினமான சூலைநோயுண்டாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் வயிற்றுவலி, காலெறிவு, தேகங்கனத்தல், வாந்தியாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் ரஜஸ் அதிகமாகப்போகுதல் முதலிய ரஜஸ்தோஷங்களும், யோனி சுருக்கம், கருப்பையிலிருந்து சீயொழுகுதல், எப்போதும் கருப்பையிலிருந்து வெண்மையான நீர் ஒழுகுதல், யோனி ரணங்கள் இவை முதலிய ஸ்திரீ சம்பந்தமான சகல ரோகங்களையும் போக்குவதில் இது நிகரற்ற அவுஷதம். சூதக சூலை ரோகங்களுக்கும் மற்றும் அநேக யோனிசம்பந்த ரோகங்களுக்கும் அற்புதமாய் நன்மைசெய்யும். விலை சீசா 1-க்கு ரூ. ஒன்று. 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

28. பிரஹத் சந்திரோதய மகரத்வஜம்:—தாது நஷ்டம், பலஹீனம், புருஷத்தன்மையிலாமை, இந்திரிய நஷ்டம், சொப்பன ஸ்கலிதம், புத்தி பிரமை, மறதி, விந்துக்ஷீணம், சீக்கிர ஸ்கலிதம் முதலிய பற்பல ரோகங்களை வேருடன் கொன்று அபரிமிதமான புருஷத்தன்மையைத்தரும். சந்தேகமில்லை இம்மருந்து சாப்பிட தொடங்கின நாள்முதல் நாளுக்கு நாள் இதன் சிறந்த குணத்தைக்காட்டும். பாலியத்தில் சிற்றின்பத்தில் நுழைந்து புருஷத்தன்மையை சீக்கிரத்திலிழந்து பரிதவிப்போர்கள் இம்மருந்து சாப்பிட்டுவந்தால் வெகு சீக்கிரம் பூரண

## பி. சுப்பறுமின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

புருஷத்தன்மையை திரும்பப்பெற்று சுகிக்கலாம் என்பது நிச்சயம். எழு வேளைய ஔஷதம் ரூபாய் 3, வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்

29. **சவன பிராசனம்:**—இம்மருந்தினால் ஈளை, இருமல், சுவாச காசம், க்ஷயம் தொண்டை ரணம், கபம், இன்னும் நுரை ஈரலைப்பற்றிய எல்லாவித வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் தடையின்றி தீரும். இம்மருந்து பலஹீனத்தைப் போக்கி தேகத்திற்கு வலுவையும், தேஜஸையும், காந்தியையும் தரும். சவனமஹாரிஷியவர்களுக்கு இம்மருந்து தேவர்களால் செய்துகொடுக்கப்பட்டு ரிஷி பாலிய திசை யடைந்ததாக ஆயுர்தே சாஸ்திரத்தில் கொண்டாடப்பட்ட சவனபிருசனம் என்னும் சிறந்த ஔஷதம். டப்பா 1-க்கு ரூபா 2, வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

30. **மகரத்துவஜம்:**—இம்மருந்திற்கு ஒப்பான ஔஷதம் ஆயுர்வேதத்தைத் தவிர வேறெந்தவகை மருந்து சாஸ்திரத்திலேயும் கிடையாது. இம்மருந்தினால் தீராத வியாதியாவது குணமடையாத வியாதியாவது கிடையாது. அநேக வியாதிகளுக்கு இது கைகண்ட ஔஷதம் எக்காரணத்தினாலுண்டாகும் தாது நஷ்டம், பலஹீனம், மதுமூத்திரம், அதிமூத்திரம், மூத்திர அடைப்பு, பிரமேகம் முதலிய இன்னும் அநேக மூத்திர நோய்களும் எல்லாவித சுரங்களையும், ஜலுப்பு, இருமல், க்ஷயம் காசம், அஜீரணம், நீர்க்கோர்வை, பாண்டு, சோகை, காமாலை, மயக்கம், சித்த பிரமை, காலரு, பிளேக், ஆண்குறிதுவளல், ஸ்திரீகளுக்கு கர்ப்பமாயிருக்கும்பொழுதும் பிரசவித்தபின்பும் காணும் சகல நோய்களையும், நரம்புகளின் பலஹீனம் முதலிய இன்னும் அநேகவித வியாதிகளையும் குணமாக்கும் மூளையைப்பலப்படுத்தும் இம்மருந்து தங்கம்முதலியதுகள் சேர்த்து செய்யப்பட்டிருக்கின்றது. விலை தோலா 1-க்கு ரூபா 24. எழு வேளைய ஔஷதம் ரூபா ஒன்று. வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

31. **வசந்த குசுமாகரம்:**—சர்க்கரையோடு கூடியதும் அதாவது மதுமேகம், சர்க்கரையில்லாததுமாகிய நீரிழிவு, பிரமேகம், மூத்திர கிருச்சிரம், தாது நஷ்டம், பலஹீனம், உடல்வெளுப்பு, இந்திரியநஷ்டம், அதி தாகம், இருமல், நாக்கு வரண்டு போகுதல், களைப்பு, மயக்கம் அசதி, கைகால்கள் எரிச்சல் முதலிய அநேக வியாதிகள் சீக்கிரம் அடியோடு குணமாகும். மிகவும் விலையுயர்ந்த ஔஷதம். இது செய்வதில் முத்து, தங்கம், கஸ்தூரி முதலிய இன்னும் விலைபெற்ற சாமான்கள் சேருகின்றன. எழுவேளைய ஔஷதம் விலை ரூபா 5. வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

32. **இரத்த சுத்தி:**—தேகத்தில் இரத்தம்கெட்டு போகுதலால் உண்டாகும் வாய்ப்புண், கண்ணோய், புண்புரைகள், மேஹரணங்கள், மேகதடிப்பு, அரிப்பு, படை குஷ்டம் முதலிய சருமவியாதிகள், பலஹீனம், அசதி, வாதப்பிடிப்பு, தலைவலி, அக்கினிமாந்தம், அரோசிகம், வாய் கசப்பு, தேகத்தில் நாற்றம், மகோதரம், தோல்நிரம் மாறுதல், தோலில் சொறணை யற்றுப்போகுதல், புத்திமந்தம் முதலிய பற்பல வியாதிகள் குணமாகும். ரத்தத்திலுள்ள நஞ்சைப்போக்கி, சுத்தப்படுத்தி தேகவலிவு, தேஜஸ், நல்ல பசி, தாதுபுஷ்டி யுண்டாக்கும். 20 நாளைக்குப்போதுமான மருந்து டப்பா 1-க்கு ரூபாய் 2, வி. பி. சிலவு 1 அல்லது 2 டப்பாக்கள் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.